**நாள் 1**

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
  சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
  மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
  போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
  ஈதேயெந் தோழி பரிசேலோர் எம்பாவாய். 1 (திருவெம்பாவை - மாணிக்கவாசகர்)

மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்
சீர் மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்
ஏரார்ந்த கண்ணி யசோதை இளம் சிங்கம்
கார் மேனி செங்கண் கதிர் மதியம் போல் முகத்தான்
நாராயணனே நமக்கே பறை தருவான்
பாரோர் புகழப் படிந்தேலோர் எம்பாவாய். 1 (திருப்பாவை - ஆண்டாள்)

அண்ணா மலைரமண னன்பர்க் கருண்மாரி
கண்ணாலே பெய்யுங் கருணைத் திறம்பாடி
எண்ணா தனவெண்ணி யேங்கடியர் வெம்பாவத்
திண்ணா சறவே தெறுசே வகம்பாடிப்
பெண்ணா ணலிகளெனும் பேதத்தை நீத்துத்தம்
உண்ணா டுளத்தொளிரு முண்மை வளம்பாடிப்
பண்ணா ரவன்புகழைப் பாடுங்கீ தாமுதம்போற்
றண்ணா ரமைதி தழையேலோ ரெம்பாவாய். 1 (ரமண திருவெம்பாவை - முருகனார்)

**நாள் 2**

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசும இடமீதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோர் எம்பாவாய். 2

வையத்து வாழ்வீர்காள் நாமும் நம்பாவைக்குச்
செய்யும் கிரிசைகள் கேளீரோ பாற்கடலுள்
பையத் துயின்ற பரமனடி பாடி
நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி
மையிட்டு எழுதோம் மலரிட்டு நாம் முடியோம்
செய்யாதன செய்யோம் தீக்குறளைச் சென்றோதோம்
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கை காட்டி
உய்யுமாற் எண்ணி உகந்தேலோர் எம்பாவாய். 2

தங்காய் மணிக்கதவந் தாழ்திறவாய் தன்கழல்கள்
சிங்கார மாகவென் சென்னிமேற் சேர்வித்த
கங்கா தரவேங் கடரமணப் பெம்மானைப்
பொங்கா தரத்திற் புகலடியர் தோத்திரம்போய்
மங்கா தெழுந்தட்ட மாதிரமு முற்றெழுப்ப
இங்கே யெமைத்தா னெழுப்புவதாப் பேசியநீ
கொங்கா ரமளிக்கே கோப்புண்டு கண்வளர்வாய்
எங்காயீ தேநின் னியல்பேலோ ரெம்பாவாய். 2

## நாள் 3

முத்தன்ன வெண்நகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
  அத்தன்ஆ னந்தன் அமுதன்என் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
  பத்துடையீர் ஈசன் பழஅடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
  எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நஞ்சிவனை
  இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய். 3

ஓங்கி உலகளந்த உத்தமன் பேர் பாடி
நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி நீராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும் மாரி பெய்து
ஓங்கு பெறும் செந் நெல் ஊடு கயலுகளப்
பூங்குவளைப் போதில் பொறி வண்டு கண் படுப்பத்
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலை பற்றி
வாங்க குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய். 3

தன்னள வில்லாத் தலைமையான் வேங்கடவன்
என்னள வில்லா ரிழிசினரென் றெள்ளாது
நென்னலாற் றன்சந் நிதிமுன் னிகழ்வித்து
நன்னலமா யாண்ட நலத்தைநீ நாடாதே
முன்னந் துயின்றமுழு மோகத்தால் வைகறைக்கே
இன்னந் துயிலுதியோ வெங்காய் துயிலெழாய்
முன்னலா யாண்ட முகவிலா சம்பாடி
அந்நலாய் பூந்தடம்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 3

## நாள் 4

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
  வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
  கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
  கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாம்மாட்டொம் நீயேவந்து
  எண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய்.  4

ஆழி மழைக் கண்ணா ஒன்று நீ கை கரவேல்
ஆழி உள் புக்கு முகந்து கொடு ஆர்த்து ஏறி
ஊழி முதல்வன் உருவம் போல் மெய் கறுத்துப்
பாழிய் அம் தோளுடைப் பற்பனாபன் கையில்
ஆழி போல் மின்னி வலம்புரி போல் நின்று அதிர்ந்து
தாழாதே சார்ங்க முதைத்த சர மழை போல்
வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோர் எம்பாவாய். 4

பொங்கமளி மேலாற் புரண்டு புரண்டசையும்
தங்கைச்சீ தாழ்குழலாய் சங்கரவங் கேட்டிலையோ
வங்கமா வூர்ந்தாயேல் வஞ்சத் துயின்மடியால்
மங்குவாய் கண்டாய் மடியா தெழுந்திராய்
சிங்கக்கண் ணோக்கத்தான் செந்தா மரைபோலும்
தங்கக்கை வேங்கடவன் சார்ந்தடைந்த பேதையராம்
எங்கையர்க்கு நல்கும்பே ரின்பத் திறம்பாடிப்
பங்கயப்பூம் பொய்கை படியேலோ ரெம்பாவாய். 4

## நாள் 5

மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
  போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
  ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
  சீலமும் பாடிச் சிவனே சிவனேஎன்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
  ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய். 5

மாயனை மன்னு வட மதுரை மைந்தனைத்
தூய பெரு நீர் யமுனைத் துறைவனை
ஆயர் குலத்தினில் தோன்றும் அணி விளக்கைத்
தாயைக் குடல் விளக்கம் செய்த தாமோதரனைத்
தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித் தொழுது
வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்கப்
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும் செப்பேலோர் எம்பாவாய். 5

கள்ள மிலாய்போற் கரந்துரையால் வஞ்சித்த
கள்வீ யெழுந்திராய் கண்கழுவித் தாழ்திறவாய்
எள்ளி யிகழ்ந்துரையா லேசாதே யம்மங்காய்
வெள்ளப் பரங்கருணை வேங்கடவன் சீர்பாடும்
கிள்ளைமொழி யங்கயற்கட் கேளிரெலாம் போந்தாரோ
பொள்ளென் றனைவருந்தாம் போந்தார்போந்
தெண்ணிக்கொள்
வெள்ளி யுதித்ததோ விள்ளாய் விளங்கிரவி
பள்ளியெழுந் தானீ படரேலோ ரெம்பாவாய். 5

## நாள் 6

மானே நீ நென்னலை நாளைவந் துங்களை
  நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
  வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
  வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும்எமக்கும்
  ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய். 6

புள்ளும் சிலம்பின காண் புள்ளரையன் கோயிலில்
வெள்ளை விளி சங்கின் பேரரவம் கேட்டிலையோ
பிள்ளாய் எழுந்திராய் பேய் முலை நஞ்சுண்டு
கள்ளச் சகடம் கலக்கழியக் காலோச்சி
வெள்ளத்தரவில் துயிலமர்ந்த வித்தினை
உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்
மெள்ள எழுந்து அரி என்ற பேரரவம்
உள்ளம் புகுந்து குளிர்ந்தேலோர் எம்பாவாய். 6

எதிர்குதிரா வேற்றிடியே றார்த்ததிர்ந்தா லென்ன
மதிகதிர்தோய் சோணை மலைமுழைஞ்சு கூவ
அதிர்குரலா லன்ப ரகவுதுதி யோசை
உதையவுமே காதை யுறங்கலுணர் வாமோ
பதிவிரத மங்கையீர் பார ரமணன்
அதிமதுர வின்பமளித் தாண்டா னடிக்கீழ்
அதிகார வாணைக் கடங்கிரம ணீயக்
கதிர்காம முற்றிக் களியேலோ ரெம்பாவாய். 6

## நாள் 7

அன்னே இவையுஞ் சிலவோ பலஅமரர்
  உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
  தென்னாஎன் னாமுன்னம் தீசேர் மெழுகுஒப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெஎல்லாமும்
  சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
  என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய்.  7

கீசு கீசு என்று எங்கும் ஆனைச் சாத்தான் கலந்து
பேசின பேச்சரவம் கேட்டிலையோ பேய்ப் பெண்ணே
காசும் பிறப்பும் கலகலப்பக் கை பேர்த்து
வாச நறும் குழல் ஆய்ச்சியர் மத்தினால்
ஓசை படுத்த தயிரரவம் கேட்டிலையோ
நாயகப் பெண் பிள்ளாய் நாராயணன் மூர்த்தி
கேசவனைப் பாடவும் நீ கேட்டே கிடத்தியோ
தேசமுடையாய் திறவேலோர் எம்பாவாய். 7

அட்டமா மூர்த்தியா னட்ட திசாம்பரத்தான்
அட்டமா சித்தியா னட்ட குணாசலத்தான்
அட்டவீ ரட்டத்து மண்ணா மலையகத்தும்
சிட்டரது நெஞ்சத்துஞ் சேர்வேங் கடரமணன்
திட்டமா நந்தம்மைத் தீப்பிறவி சேராமே
சட்டமா யாட்கொண்ட தண்ணளியின் சீர்நினைந்தவ்
வட்ட மதிமுகத்தோன் மாணடிக்கே சாந்தான்ம
நிட்டைநீ ராடி நிறையேலோ ரெம்பாவாய். 7

## நாள் 8

கோழி சிலம்பச் சிலம்புங் குரகெங்கும்
  ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெளங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
  கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழியீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
  ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
  ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய். 8

கீழ் வானம் வெள்ளென்று எருமை சிறு வீடு
மேய்வான் பரந்தன காண் மிக்குள்ள பிள்ளைகளும்
போவான் போகின்றாரைப் போகாமல் காத்து உன்னைக்
கூவுவான் வந்து நின்றோம் கோதுகலம் உடைய
பாவாய் எழுந்திராய் பாடிப் பறை கொண்டு
மாவாய் பிளந்தானை மல்லரை மாட்டிய
தேவாதி தேவனைச் சென்று நாம் சேவித்தால்
ஆவாவென்று ஆராய்ந்து அருளேலோர் எம்பாயாய். 8

மீதார்வ மோடுபல விண்ணோரைச் சேவித்தும்
ஏதாக வேண்டுமென வென்னைக்கண் ணோக்காதார்
ஆதாளி யன்றியரு ளாற்றலில ராயொழிய
ஆதார வேங்கடனே யஞ்சலென்றா னாதலால்
வாதாட லற்றவ் வரதற்கே யன்பாகிப்
பாதார விந்தந் தலையாற் பணிவோமாய்த்
தூய்தாய தொண்டுபட்டுத் தோழமைக்கே பாங்காகிக்
கோதாய்நீ ராடிக் குளிரேலோ ரெம்பாவாய். 8

## நாள் 9

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
  பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
  உன்னடியார் தாள் பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எம்கணவர் ஆவார் அவருகந்து
  சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
  என்ன குறையும் இலோம் ஏலோர் எம்பாவாய். 9

தூமணி மாடத்து சுற்றும் விளக்கெரியத்
தூபம் கமழத் துயிலணைமேல் கண் வளரும்
மாமான் மகளே மணிக் கதவம் தாழ் திறவாய்
மாமீர் அவளை எழுப்பீரோ உன் மகள் தான்
ஊமையோ அன்றி செவிடோ அனந்தலோ
ஏமப் பெருந் துயில் மந்திரப் பட்டாளோ
மாமாயன் மாதவன் வைகுந்தன் என்றென்று
நாமன் பலவும் நவின்றேலோர் என்பாவாய். 9

கண்ணவாய் நின்ற கனவருளான் காதலார்
எண்ணவாய் நின்ற விதயத்தா னென்றலைமேற்
றிண்ணமா யின்னினியுந் தீப்பிறவி சேராமே
வண்ணமாச் சூட்டிய வார்கழலான் வாரிதிசூழ்
மண்ணவாய் நின்றபல மாண்பினான் மண்கடந்து
விண்ணவாய் நின்ற விழுப்புகழான் வேங்கடவன்
பண்ணவாய் நின்றபுகழ் பாடிப் பனித்தடம்பாய்ந்
தண்ணலாற் கன்பாகி யாடேலோ ரெம்பாவாய். 9

**நாள் 10**

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை யொருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்தன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலார் எம்பாவாய். 10

நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்.
மாற்றமும் தாராரோ வாசல் திறவாதார்
நாற்றத் துழாய் முடி நாராயணன் நம்மால்
போற்றப் பறை தரும் புண்ணியனால் பண்டு ஒரு நாள்
கூற்றத்தின் வாய் வீழ்ந்த கும்ப கரணனும்
தோற்றும் உனக்கே பெருந்துயில் தான் தந்தானோ
ஆற்ற அனந்தல் உடையாய் அருங்கலமே
தேற்றமாய் வந்து திறவேலோர் எம்பாவாய். 10

அல்லாத வாணவஞ்சே ராருயிரை வாள்விழியாற்
கொல்லாதே கொன்று கொளுத்துமெய்ஞ் ஞானத்தான்
இல்லாதே யுள்ளனபோற் றோற்றுமெலா வற்றுக்கும்
இல்லாதாத் தோற்றி யுளதாகுஞ் செம்பொருளான்
கல்லாதே கற்றுணர்ந்த கல்விப் பொருடன்னைச்
சொல்லாதே சொல்லித் துலக்குமொளிர் மோனத்தான்
பொல்லா மணிரமணன் போகமெலா நன்கருள
வல்லா னடிவாழ்த்தி வாழேலோ ரெம்பாவாய். 10

**நாள் 11**

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
  கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போற்
  செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
  ஐயாநீ ஆட்கொண்டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
  எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாய். 11

கற்றுக் கறவைக் கணங்கள் பல கறந்து
செற்றார் திறலழியச் சென்று செருச் செய்யும்
குற்றம் ஒன்றில்லாத கோவலர்த்தம் பொற்கொடியே
புற்று அரவு அல்குல் புனமயிலே போதராய்
சுற்றத்து தோழிமார் எல்லாரும் வந்து நின்
முற்றம் புகுந்து முகில் வண்ணன் பேர் பாட
சிற்றாதே பேசாதே செல்வ பெண்டாட்டி நீ
எற்றுக்கு உறங்கும் பொருளேலோர் எம்பாவாய். 11

உள்ளற் கரிய வொருமையா னொன்றானும்
தள்ளற் கரியமுழுத் தத்துவத்தான் சார்ந்தார்கண்
மொள்ளத் தகூஉ முகப்பொலிவான் மோகத்தைத்
தெள்ளத் தெளிக்குந் திருநோக்கான் சிந்தையால்
அள்ளக் குறையா வருளுடையா னாண்டதிறம்
விள்ளற் கரிய விழுப்புகழான் வேங்கடன்சீர்
கள்ளப் படாக்களியாற் காரிகையாய் நாம்பாடிப்
பள்ளப் பனிநீர் படியேலோ ரெம்பாவாய். 11

## நாள் 12

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்துஆடும்
  தீர்த்தன்நல் தில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தன்இவ் வானுங் குவலயமும் எல்லோமும்
  காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
  ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
  ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோர் எம்பாவாய்.  12

கனைத்து இளம் கற்றெருமை கன்றுக்கு இரங்கி
நினைத்து முலை வழியே நின்று பால் சோர
நனைத்து இல்லம் சேறாக்கும் நற் செல்வன் தங்காய்
பனித் தலை வீழ நின் வாசற் கடை பற்றிச்
சினத்தினால் தென் இலங்கைக் கோமானைச் செற்ற
மனத்துக்கு இனியானைப் பாடவும் நீ வாய் திறவாய்
இனித்தான் எழுந்திராய் ஈதென்ன பேர் உறக்கம்
அனைத்து இல்லத்தாரும் அறிந்தேலோர் எம்பாவாய். 12

கண்ணின்ற கஞ்சத்தாற் காட்டுகின்ற மெய்யுருவாற்
றண்ணென்ற நீர்மையாற் சங்கஞ்சூழ் கொள்கையாற்
றுண்ணென்றுட் டோய்வார் மலங்கழூஉந் தூய்மையாற்
றெண்ணின்ற வேங்கடனுஞ் சிற்பரையும் போன்றிசைந்த
மண்ணின்ற மானதமா வாவிமா னும்மடுக்கண்
எண்ணில்பே ரின்ப மிதயத் தலம்பொங்க
உண்ணா ரமுதம்போ லுச்சிதமாந் தீம்புகழைப்
பண்ணார வோதிப் படியேலோ ரெம்பாவாய். 12

**நாள் 13**

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
  அங்கம் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலம்கழுவு வார்வந்து சார்தலினால்
  எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவில் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
  சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
  பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். 13

புள்ளின் வாய் கீண்டானைப் பொல்லா அரக்கனைக்
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்தி மை பாடிப் போய்ப்
பிள்ளைகள் எல்லாரும் பாவைக் களம்புக்கார்
வெள்ளி எழுந்து வியாழம் உறங்கிற்று
புள்ளும் சிலம்பின காண் போதரிக் கண்ணினாய்
குள்ளக் குளிரக் குடைந்து நீராடாதே
பள்ளிக் கிடத்தியோ. பாவாய். நீ நன் நாளால்
கள்ளம் தவிர்ந்து கலந்தேலோர் எம்பாவாய். 13

சேரத் திரண்டு திருவேங் கடரமணன்
பாரச் செழுங்கருணைப் பைங்கடலை நின்னாசை
தீரப் பருகிநீ தேக்கிட்டு மையலிழை
வீரத் தொழில்வல்ல வெம்மாயை போறக்கறுத்து
நேர நிமிர்ந்தவென்கன் னெஞ்சத்தின் மீதேறித்
தேரத் தெளிமோனச் செஞ்சொல்லே போற்குமுறி
ஊருந் திருக்கண்ணோக் கொத்தொளிர்ந்து பேரின்பம்
வாரப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய். 13

**நாள் 14**

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
  கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
  வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடி
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
  ஆதி திறம்பாடி அந்தம ஆ மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்துஎடுத்த பெய்வளைதன்
  பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய். 14

உங்கள் புழக்கடைத் தோட்டத்து வாவியுள்
செங்கழுனீர் வாய் நெகிழ்ந்து ஆம்பல் வாய் கூம்பின காண்
செங்கற் பொடிக் கூரை வெண்பல் தவத்தவர்
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போதன்றார்
எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்
நங்காய் எழுந்திராய் நாணாதாய் நாவுடையாய்
சங்கோடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்
பங்கயக் கண்ணானைப் பாடேலோர் எம்பாவாய். 14

மருவினார் தங்கண் மனக்களிம்பு மாற்றி
உருவிளங்கு பொன்னா வொளிர்விக்குங் கண்ணான்
பொருவிலா ஞானபரி பூன்றமுழு மோனி
இருளதுகா ணாத ரமணகுரு நாதன்
அருணிதிய நோக்கியடி யாரார்த்தல் போலக்
குருவிக ளார்ப்பக் குரல்குவிய வேனல்
கருவிமலி சோணை கரைந்தொழுகு தூநீர்
அருவிநீ ராடி யவிரேலோ ரெம்பாவாய். 14

## நாள் 15

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். 15

எல்லே. இளம் கிளியே இன்னம் உறங்குதியோ
சில் என்று அழையேன் மின் நங்கையீர் போதருகின்றேன்
வல்லை உன் கட்டுரைகள் பண்டே உன் வாய் அறிதும்
வல்லீர்கள் நீங்களே நானே தான் ஆயிடுக
ஒல்லை நீ போதாய் உனக்கென்ன வேறுடையை
எல்லாரும் போந்தாரோ போந்தார் போந்து எண்ணிக்கொள்
வல் ஆனை கொன்றானை மாற்றாரை மாற்றழிக்க
வல்லானை மாயனைப் பாடேலோர் எம்பாவாய். 15

குப்பைகிளைக் குற்றுமுழுக் கோழெரிமா ணிக்கமணி
துப்பறிவில் கோழியெதிர் தோன்றியதை யெள்ளியிகழ்ந்
தொப்பவுயப் போகுமுணர் வோட்டைபோய் நாமுநமக்
கெய்ப்பினிடை வைப்பா வெளிவந்த வேங்கடனைத்
தப்பலறு சச்சிதா னந்தசிவ தத்துவனை
இப்படியின் மானிடனா வெண்ணியெள்ளி யேமாறா
தப்பரமற் காட்செய்து நீராடி யப்பயனும்
அப்பரமன் றாட்கே யடையேலோ ரெம்பாவாய். 15

**நாள் 16**

முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துடையாள்
  என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
  பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
  தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
  என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்.  16

நாயகனாய் நின்ற நந்தகோபன் உடைய
கோயில் காப்பானே. கொடி தோன்றும் தோரண
வாயில் காப்பானே. மணிக் கதவம் தாள் திறவாய்
ஆயர் சிறுமியரோமுக்கு அறை பறை
மாயன் மணி வண்ணன் நென்னலே வாய் நேர்ந்தான்
தூயோமாய் வந்தோம் துயில் எழப் பாடுவான்
வாயால் முன்னம் முன்னம் மாற்றாதே அம்மா. நீ
நேய நிலைக் கதவம் நீக்கேலோர் எம்பாவாய். 16

அனியதெய் வந்தொழல்கல் லாத்தெய்வக் கற்பால்
இனிதுபெய் யப்புயலை யேவல்கொளத் தக்கீர்
முனிமைமுக டாயமுழு மூதறிஞ ராயும்
அனாதிமல முத்தவியல் பாலேயு மன்றி
மனிதவுரு வாமண்ணில் வந்துமல பெத்த
அனாதையைநன் காளுமவ தாரநா ளாலும்
புனிதரம ணன்கமலப் பூந்தாள் கழூஉம்
புனிதநீ ராடிப் பொலியேலோ ரெம்பாவாய். 16

## நாள் 17

செங்க ணவன்பால் திசைமுகன் பால் தேவர்கள்பால்
  எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
  இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதம் தந்தருளுஞ் சேவகனை
  அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
  பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். 17

அம்பரமே தண்ணீரே சோறே அறம் செய்யும்
எம்பெருமான் நந்தகோபாலா எழுந்திராய்
கொம்பனார்க்கு எல்லாம் கொழுந்தே குல விளக்கே
எம்பெருமாட்டி யசோதாய் அறிவுறாய்
அம்பரம் ஊட அறுத்து ஓங்கி உளகு அளந்த
உம்பர் கோமானே உறங்காது எழுந்திராய்
செம் பொற் கழலடிச் செல்வா பலதேவா
உம்பியும் நீயுன் உறங்கேலோர் எம்பாவாய். 17

நாதமோர்த் தேவிந்து நாட்டமோர்த் தேநலியும்
பேதமாக் காட்சிமெய்யாப் பேதுறா தோர்முதலாம்
போதவான் போலுயிரின் பொய்யோ டதன்பொருளாம்
போதவான் மெய்ப்புரணப் பூன்றவியல் புந்தெரித்தான்
நீதமாத் தேடுநெறி நேதிப் பயனாக
மீதமா நித்தசித்த மெய்ப்பொருளாம் வேங்கடவன்
பூதமா வேத புருடனித மாடுமவன்
பாததீர்த் தம்படிந் தாடேலோ ரெம்பாவாய். 17

**நாள் 18**

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
  விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
  தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாம் அகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
  விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
  பெண்ணே இப்பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். 18

உந்து மத களிற்றன் ஓடாத தோள் வலியன்
நந்தகோபன் மருமகளே நப்பின்னாய்
கந்தம் கமழும் குழலி கடை திறவாய்
வந்து எங்கும் கோழி அழைத்தன காண் மாதவிப்
பந்தல் மேல் பல் கால் குயிலினங்கள் கூவின காண்
பந்து ஆர் விரலி உன் மைத்துனன் பேர் பாடச்
செந்தாமரைக் கையால் சீரார் வளை ஒலிப்ப
வந்து திறவாய் மகிழ்ந்தேலோர் எம்பாவாய். 18

கையறியா மாக்களொடு காதலரு முண்டாடி
நெய்யு மதுவு நெகிழ்ந்தசெழுஞ் சாந்துமளாய்த்
துய்யவியல் வேறாகித் தோயலர்வாய் பூசலராய்
ஐயரொடு மாதவரு மந்தணர்பார்ப் பாருந்தம்
செய்கைசெய் யார்மீளுஞ் செங்கலுழிக் காவேரி
வைகைமுத னீராடல் வாலிதன்று நோற்பார்க்கு
மெய்யறிவா னந்தமய வேங்கடமா தீர்த்தன்றாட்
பொய்கைநீ ராடிப் பொலியேலோ ரெம்பாவாய். 18

## நாள் 19

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்என்று
  அங்கப் பழஞ்சொல் புதுக்கும்எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுஉரைப்போங்கேள்
  எங்கொங்கை நின்னன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
  கங்குல் பகல்எங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
  எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோர் எம்பாவாய். 19

குத்து விளக்கெரிய கோட்டுக் கால் கட்டில் மேல்
மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேல் ஏறிக்
கொத்தலர் பூங்குழல் நப்பினை கொங்கை மேல்
வைத்துக் கிடந்த மலர் மார்பா வாய் திறவாய்
மைத் தடம் கண்ணினாய் நீ உன் மணாளனை
எத்தனை போதும் துயிலெழ ஒட்டாய் காண்
எத்தனையேலும் பிரிவு ஆற்றகில்லாயால்
தத்துவம் அன்று தகவேலோர் எம்பாவாய். 19

ஆரா வமுதம்போன் மானந்த வேங்கடர்மெய்
ஆரா வமுதம்போன் மன்பனார் புன்மூரல்
ஆரா வமுதம்போன் மங்கணார் கண்ணோக்கம்
ஆரா வமுதம்போன் மாசிரியர் வாய்ச்சொற்கள்
ஆரா வமுதம்போன் மாதியார் சீபாதம்
ஆரா வமுதம்போன் மண்ணலார் சீர்த்திமைகள்
ஆரா வமுதன்னா யன்னார் குணக்கடல்பாய்ந்
தாரா வமுதநீ ராடேலோ ரெம்பாவாய். 19

## நாள் 20

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
  போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றிஎல் லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
  போற்றிஎல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றிஎல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
  போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
  போற்றியாம் மார்கழிநீ ராடேலோர் எம்பாவாய்.  20

முப்பத்து மூவர் அமரர்க்கு முன் சென்று
கப்பம் தவிர்க்கும் கலியே துயில் எழாய்
செப்பம் உடையாய் திறல் உடையாய் செற்றார்க்கு
வெப்பம் கொடுக்கும் விமலா துயில் எழாய்
செப்பென்ன மென் முலைச் செவ்வாய்ச் சிறு மருங்குல்
நப்பின்னை நங்காய் திருவே துயில் எழாய்
உக்கமும் தட்டொளியும் தந்து உன் மணாளனை
இப்போதே எம்மை நீராட்டேலோர் எம்பாவாய். 20

ஆயபிறர் வல்லாண்மை யாலழிந்து போகாது
நாயடிச்சி யோங்களது நாணமொடு மானத்தை
மாயவலி யாற்காத்து வந்த வயிரக்குப்
பாயநிறை பாறப் பரமநிரு வாணமாக்
காயமா முப்புரமுங் காய்ந்துகடைக் கண்ணாலே
தூய பரவெளிக்கே தோற்றியய லார்நகைக்க
நாயகனா நம்மை நயந்தாண்ட வேங்கடன்றன்
நேயநீ ராடி நிகழேலோ ரெம்பாவாய். 20

**நாள் 21**

போற்றியென் வாழ்முத லாகிய பொருளே
  புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்
டேற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
  எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலரும்தண் வயல்சூழ்
  திருப்பெருந் துறை உறை சிவபெருமானே
ஏற்றுயர் கொடியுடை யாய்எனை யுடையாய்
  எம்பெரு மான்பள்ளி யெழுந்தருளாயே.  21 (திருப்பள்ளியெழுச்சி- மாணிக்கவாசகர்)

ஏற்ற கலங்கள் எதிர் பொங்கி மீதளிப்ப
மாற்றாதே பால் சொரியும் வள்ளல் பெரும் பசுக்கள்
ஆற்றப் படைத்தான் மகனே அறிவுறாய்
ஊற்றம் உடையாய் பெரியாய் உலகினில்
தோற்றமாய் நின்ற சுடரே துயில் எழாய்
மாற்றார் உனக்கு வலி தொலைந்து உன் வாசற் கண்
ஆற்றாது வந்து உன் அடி பணியுமா போலே
போற்றியாம் வந்தோம் புகழ்ந்தேலோர் எம்பாவாய். 21

சகலமொடு கேவலமே சார்ந்துதெளி வாய
சுகலவமு மில்லாத சூனியமா மாயை
முகடிபான் மோகித்து மூதறிஞர் தம்மாற்
பகடிசெய் யப்பட்டுப் பாழ்ம்பிறப்புக் காளாய்
விகடங்கள் பாராட்டி வீண்காலம் போக்கா
தகளங்க னாநம்மை யாண்டா னடியோம்
முகடாய வேங்கடன்றாண் மோனமா முன்னி
அகடா மிதயத் தமிழேலோ ரெம்பாவாய். 21

## நாள் 22

அருணன் இந்திரன் திசை அணுகினன் இருள்போய்
  அகன்றது உதயம்நின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழவெழ நயனக்
  கடிமலர் மலரமற்று அண்ணலங் கண்ணாம்
திரள்நிரை அறுபதம் முரல்வன இவையோர்
  திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
அருள் நிதி தர வரும் ஆனந்த மலையே
  அலைகடலே பள்ளி யெழுந்தருளாயே. 22

அம் கண் மா ஞாலத்து அரசர் அபிமான
பங்கமாய் வந்து நின் பள்ளிக் கட்டிற் கீழே
சங்கம் இருப்பார் போல் வந்து தலைப்பெய்தோம்
கிங்கிணி வாய்ச் செய்த தாமரைப் பூப் போலே
செங்கண் சிறுச் சிறிதே எம்மேல் விழியாவோ
திங்களும் ஆதித்தனும் எழுந்தாற் போல்
அம் கண் இரண்டும் கொண்டு எங்கள் மேல் நோக்குதியேல்
எங்கள் மேல் சாபம் இழிந்தேலோர் எம்பாவாய். 22

யான்பரமென் றேசெருக்கா தென்னுள்ளே வேங்கடவன்
தான்கடவு ளாகத் தலைப்பட் டொளிர்வதனால்
ஊன்கெட் டுயிர்கெட் டுணர்வுகெட்டெ னுள்ளமும்போய்
நான்கெட் டதுவாய் நடுநின்ற மெய்ஞ்ஞான
வான்கடவு ளாக வழங்குதலை யாரறிவார்
யானொடுதா னென்னு மிருவோரு மன்றிக்கே
நானென்னுஞ் சொற்பொருளை நாடியித யத்தடத்து
நான்கெடநன் காடி நயவேலோ ரெம்பாவாய். 22

## நாள் 23

கூவின பூங்குயில் கூவின கோழி
  குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளியொளி உதயத்து
  ஒருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்
  திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
யாவரும் அறிவரி யாய்எமக் கெளியாய்
  எம்பெரு மான்பள்ளி யெழுந்தருளாயே.  23

மாரி மலை முழைஞ்சில் மன்னிக் கிடந்து உறங்கும்
சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீ விழித்து
வேரி மயிர் பொங்க எப்பாடும் பேர்ந்து உதறி
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்
போதருமா போலே நீ பூவைப்பூ வண்ணா உன்
கோயில் நின்று இங்ஙனே போந்தருளிக் கோப்புடைய
சீரிய சிங்காசனத்து இருந்து யாம் வந்த
காரியம் ஆராய்ந்து அருளேலோர் எம்பாவாய். 23

வன்மமுறத் தாரு வனத்தாரை யேமாற்றும்
கன்மநெறிக் கேபோங் கடையே னிறைபணியாம்
தன்மமறி யாச்சழக்காற் றன்னான்ம தத்துவமாம்
மன்மமறி யாதிந்த மாநிலத்தே யிந்திரியப்
பன்முகமா யோடிப் பதையா தெனையாண்ட
தென்முகநோக் குஞ்ஞான தேசிகனாம் வேங்கடற்கே
புன்மலமா நானெனது புல்லா நிராசையாம்
நின்மலநீ ராடி நிகழேலோ ரெம்பாவாய். 23

## நாள் 24

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
  இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
  தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
  திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
என்னையும் ஆண்டுகொண்டின்னருள் புரியும்
  எம்பெரு மான்பள்ளி யெழுந்தருளாயே. 24

அன்று இவ் உலகம் அளந்தாய் அடி போற்றி
சென்றங்குத் தென் இலங்கை செற்றாய் திறல் போற்றி
பொன்றச் சகடம் உதைத்தாய் புகழ் போற்றி
கன்று குணில் ஆவெறிந்தாய் கழல் போற்றி
குன்று குடையாய் எடுத்தாய் குணம் போற்றி
வென்று பகை கெடுக்கும் நின் கையில் வேல் போற்றி
என்றென்றும் உன் சேவகமே ஏத்திப் பறை கொள்வான்
இன்று யாம் வந்தோம் இரங்கேலோர் எம்பாவாய். 24

பொய்வளம் பூத்தவிடை பொங்குமுலைக் கேமுறியத்
தைவளம் பூத்தநீர் தாமுகந்த தையலர்காள்
ஐவளம் பூத்தசோ ணாசலத்தா னன்னம்பெய்
கைவளம் பூத்த கவிகையான் கண்டார்கண்
மொய்வளம் பூத்த முகப்பொலிவான் முன்னெதிர்ந்தார்
மைவளம் பூத்தமயன் மாய்க்குங்கண் வேங்கடவன்
மெய்வளம் பூத்தகழல் வேட்கையாய் மெய்ஞ்ஞான
தெய்வநீ ராடித் திகழேலோ ரெம்பாவாய். 24

## நாள் 25

பூதங்கள் தோறும்நின் றாய்எனின் அல்லால்
  போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
  கேட்டறி யோம்உனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா
  சிந்தனைக் கும்அரியாய் எங்கள் முன்வந்து
ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
  எம்பெரு மான்பள்ளி யெழுந்தருளாயே.  25

ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓர் இரவில்
ஒருத்தி மகனாய் ஒளித்து வளரத்
தரிக்கிலான் ஆகித் தான் தீங்கு நினைந்த
கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்
நெருப்பென்ன நின்ற நெடுமாலே., உன்னை
அருத்தித்து வந்தோம் பறை தருதியாகில்
திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம் பாடி
வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்தேலோர் எம்பாவாய். 25

நில்லா தவற்றை நிலையினவாக் கொண்டுவக்கும்
புல்லறி வாண்மை புலம்பெய்த வேங்கடவன்
கல்லா லெனதுளமாக் காதலான் மெய்கேட்ட
நல்லா ரகக்கரண நான்கா வறிதிருந்து
சொல்லா லடங்காச் சுகோதயத்தைச் சோதியிருள்
அல்லா வதீதவித யாகாயத் தாய்வித்தான்
பல்லார் பரவுமுழு மோனப் பரவைபடிந்
தெல்லாநீ ராடியெழுந் தேத்தேலோ ரெம்பாவாய். 25

## நாள் 26

பப்பற வீட்டிருந்து உணரும்நின் அடியார்
  பந்தனை வந்தறுத் தார் அவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
  வணங்குகின்றார் அணங் கின்மண வாளா
செப்புறு கமலங்கண் மலரும்தண் வயல்சூழ்
  திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
இப்பிறப்பு அறுத்து எமை ஆண்டருள் புரியும்
  எம்பெரு மான்பள்ளி யெழுந்தருளாயே.  26

மாலே. மணிவண்ணா. மார்கழி நீராடுவான்
மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்
ஞாலத்தை எல்லாம் நடுங்க முரல்வன
பால் அன்ன வண்ணத்து உன் பாஞ்ச சன்னியமே
போல்வன சங்கங்கள் போய்ப் பாடுடையனவே
சாலப் பெரும் பறையே பல்லாண்டு இசைப்பாரே
கோல விளக்கே கொடியே விதானமே
ஆலின் இலையாய் அருளேலோர் எம்பாவாய். 26

செருவிகற்பஞ் சேர்ந்தகளச் சிந்தைமயல் செற்ற
குருவிகற்ப னேனுங் குணங்குறிக ளாக
வருவிகற்ப மொன்றுமரு வாதரம ணற்கே
உருவிகற்ப மாமெவ் வுலகத்துஞ் சூக்கக்
கருவிகற்ப வாதனையாற் காண்கனவின் கண்ணும்
இருவிகற்ப மென்பதோ ரெட்டுணையு மின்றி
ஒருவிகற்ப மாக வொளிர்சகச பாவ
நிருவிகற்ப மாடி நிறையேலோ ரெம்பாவாய். 26

## நாள் 27

அது பழச்சுவையென அமுதென அறிதற்கு
  அரிதென எளிதென அமரும் அறியார்
இது அவன் திருவுரு இவன் அவன் எனவே
  எங்களை ஆண்டுகொண்டு இங் கெழுந்தருளும்
மதுவளர் பொழில்திரு உத்தர கோச
  மங்கையுள்ளாய்திருப் பெருந்துறை மன்னா
எதுஎமைப் பணிகொளு மாறது கேட்போம்
  எம்பெருமான்பள்ளி யெழுந்தருளாயே.  27

கூடாரை வெல்லும் சீர் கோவிந்தா உந்தன்னைப்
பாடிப் பறை கொண்டு யாம் பெறும் சம்மானம்
நாடு புகழும் பரிசினால் நன்றாகச்
சூடகமே தோள் வளையே தோடே செவிப் பூவே
பாடகமே என்றனைய பலகலனும் யாம் அணிவோம்
ஆடை உடுப்போம் அதன் பின்னே பாற் சோறு
மூட நெய் பெய்து முழங்கை வழி வாரக்
கூடி இருந்து குளிர்ந்தேலோர் எம்பாவாய். 27

துணர்மாலை சூடுவேந் தோய்வேந்தோ ளென்றென்
றுணர்வுமிக் கீர்போ லுஞற்றுநோன் பீர்காள்
வணமொன்று மில்லான் வடிவொன்று மில்லான்
குணமொன்று மில்லான் குறியொன்று மில்லான்
உணர்ச்சியொன் றில்லா னுணராமை யில்லான்
கணிச்சிகண் ணாவன்பர் கட்டழிக்க வல்லான்
இணைச்சுவேட் டார்க்கவ் விறைரமண னோடு
புணர்ச்சிதா னும்புணர்ப்பே போன்மேலோ ரெம்பாவாய். 27

**நாள் 28**

முந்திய முதல்நடு இறுதியும் ஆனாய்
  மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்
பந்தணை விரலியும் நீயும்நின்னடியார்
  பழங்குடில் தொறும்எழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
  திருப்பெருந் துறையுறை கோயிலும் காட்டி
அந்தணன் ஆவதும் காட்டிவந் தாண்டாய்
  ஆரமுதே பள்ளி யெழுந்தருளாயே. 28

கறவைகள் பின் சென்று கானம் சேர்ந்து உண்போம்
அறிவு ஒன்றும் இல்லாத ஆய்க் குலத்து உந்தன்னைப்
பிறவி பெறுந்தனைப் புண்ணியம் யாம் உடையோம்
குறை ஒன்றும் இல்லாத கோவிந்தா உந்தன்னோடு
உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது
அறியாத பிள்ளைகளோம் அன்பினால் உந்தன்னை
சிறு பேர் அழைத்தனமும் சீறி அருளாதே
இறைவா நீ தாராய் பறையேலோர் எம்பாவாய். 28

விஞ்சுங் கருவாய வேங்கடவன் மெல்லடியிற்
றுஞ்சிக் கிடவாதத் தொல்லோன் பெரும்புகழை
வஞ்சச் செருக்கான் மயன்றுரைக்க முற்பட்ட
தஞ்சச் சிறுமியர்காள் சாலச் சதுரரது
நெஞ்சுந் தெரியா நிலைமையான் மெய்யுருவைக்
கிஞ்சிலுங் கண்டீரோ கேட்டீரோ வல்லீரே
பிஞ்சிற் பழுத்திட்ட பேதையீர் பேசாதே
அஞ்சி யடிக்க ணடங்கேலோ ரெம்பாவாய். 28

## நாள் 29

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
  விழுப்பொரு ளேயுன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
  வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
  கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாய்உல குக்குயி ரானாய்
  எம்பெருமான்பள்ளி எழுந்தருளாயே.  29

சிற்றம் சிறு காலே வந்து உன்னை சேவித்து உன்
பொற்றாமரை அடியே போற்றும் பொருள் கேளாய்
பெற்றம் மேய்த்து உண்ணும் குலத்தில் பிறந்து நீ
குற்று ஏவல் எங்களைக் கொள்ளாமல் போகாது
இற்றைப் பறை கொள்வான் அன்று காண் கோவிந்தா
எற்றைக்கும் ஏழ் ஏழ் பிறவிக்கும் உன் தன்னோடு
உற்றோமே ஆவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம்
மற்றை நம் காமங்கள் மாற்றேலோர் எம்பாவாய். 29

நாமநீ ரிட்டதொரு நல்லகழி மற்றுமொரு
நாமநீர் வானுகத்து நற்றுளையிற் கோத்தாற்போல்
ஏமமோ ராக்கா ரிருளோமை யேகபரந்
தாமமா நின்சொருப சந்நிதிக்கே சேர்த்தவருள்
ஆமதனை யன்றிநயப் பாதல் வியப்பாதல்
மாமதுர வேங்கடவா மாட்டேனான் மன்னுயிர்க்குச்
சேமஞ்செய் பொற்றாட் செழுங்காம  மொன்றொழிந்த
காமங்க ளெல்லாங் கடியேலோ ரெம்பாவாய். 29

## நாள் 30

புவனியில் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றோம்அவ மேஇந்தப்பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும்நின் அலர்ந்த மெய்க்கருணையும் நீயும்
அவனியில் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி யெழுந்தருளாயே. 30

வங்கக் கடல் கடைந்த மாதவனை கேசவனை
திங்கள் திருமுகத்து சேய் இழையார் சென்று இறைஞ்சி
அங்கப் பறை கொண்ட ஆற்றை அணி புதுவைப்
பைங்கமலத் தண் தெரியல் பட்டர் பிரான் கோதை-
சங்கத் தமிழ் மாலை முப்பதும் தப்பாமே (-சொன்ன
இங்கு இப்பரிசுரைப்பார் ஈரிரண்டு மால் வரை தோள்
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்
எங்கும் திருவருள் பெற்று இன்புறுவர் எம்பாவாய். 30

அப்பாலுக் கப்பாலென் றல்லாப்பா ராவயலார்
இப்பாலுக் கிப்பாலா யெங்கட் கெளிவந்து
கைப்பால நெல்லிக் கனியிற் றெளிவுடைத்தாய்த்
துப்பாக வுள்ளத்துட் டோய்ந்தாண்ட வாற்றாலே
மெய்ப்பால நின்முன் வெயின்மஞ்சள் போலாகிப்
பொய்ப்பால வெல்லாம் புலம்பெய்திப் போயிடநீ
எப்பாலு மெம்மை யிகவாமை வேங்கடப்பேர்
அப்பா வருள்செய் தளியேலோ ரெம்பாவாய். 30

எறிபுனந் தீப்பட் டெரியுங்கா னல்ல
வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வேமால்
செறிவேங் கடரமண தேவாநின் னேவல்
நெறிவழிக்கே கோடாது நின்றொழுகுஞ் சீரார்
அறிஞர்தங் கூட்டுறவை யார்வமொடு பேணிக்

குறியறிந் தன்னார்தங் குற்றேவல் செய்ய
உறுதியா மிந்தவர மொன்றுநீ யீந்தால்
மறுபிறவிக் கஞ்சேம்யா மற்றேலோ ரெம்பாவாய். (ரமண திருவெம்பாவை)

போற்றியுயிர்ப் போனகநின் பூன்றமா மோனநிலை
போற்றியொளிர் சின்மயநின் பொன்றாத சிற்சத்தி
போற்றியருள் பூத்தொழுகுன் பூங்கமலக் கண்ணோக்கம்
போற்றிபொரு ளந்தணநின் பொய்யாத மெய்யருள்கள்
போற்றிதரி சித்தவர்தம் புந்திகவர் புன்முறுவல்
போற்றிசுரு திப்பொருணின் புத்தமுதாங் கட்டுரைகள்
போற்றிதிரு வேங்கடநின் பொன்னடிதா மார்கழிநீர்
போற்றிவிளை யாடிப் பொலியேலோ ரெம்பாவாய்.

(ரமண திருவெம்பாவை)

வாழி மழைவண்மை வானாட ரந்தணர்கள்
வாழிநிரை நீதி வழுவாத நல்லரசு
வாழி விருந்தயரும் வாழ்க்கைத் துணைநலத்தார்
வாழி யகந்தைமல மாசற்ற மாதவத்தோர்
வாழி சிவரமணன் வன்ன மலர்க்கழல்கள்
வாழியவ னண்ணா மலைப்படிவ மாண்புறவே
வாழியருட் பார்வை வயப்பட்ட நல்லடியார்
வாழிசிவா னந்த மடுத்தேலோ ரெம்பாவாய்.

(ரமண திருவெம்பாவை)